தொழிற்பேட்டைகளில் அங்கே பணிபுரிகிறார்கள். திருநெல்வேலி, நாகர்கோயில் மற்றும் கன்னியாகுமரி, திருவனந்தபுரம் ஆகிய ஊர்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் அங்கே பணிபுரிவதால், அந்தத் தொழிலாளர்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் அவரது திருநாமத்தால் அமைந்துள்ள போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் விடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற மக்கள் புரட்சித் தலைவி ஆட்சிதான் 20 ஆம் நூற்றாண்டிலும் இருக்க வேண்டும் ; 21 ஆம் நூற்றாண்டிலும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறபோது, புரட்சித் தலைவி அவர்களின் புனிதப் பெயரால் இருக்கிற அந்தப் போக்குவரத்துக் கழகப்பேருந்துகள் எல்லா இடங்களுக்கும் வேண்டும் என்கிற ஆசை எங்களுக்கும் இருக்கிறது. அரசு நிதி நிலைக்கு ஏற்ப பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா இடங்களிலே இருந்தும், பஸ் வசதி கேட்பவர்களுக்காகத்தான் உறுப்பினர்கள் கையைத் தூக்கிக்கொண்டு இருக்கிறார்கள். நாளைக்கு மானியக் கோரிக்கை வருகிறது. உறுப்பினர்கள் அதிலே பேசலாம்.

வினா எண் 206, டாக்டர் க. கோபால்; மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.

206—

நாகப்பட்டினம் – காயிதே மில்லத் மாவட்டத்தில் நூற்பாலை அமைத்தல்.

*** 23640**—டாக்டர் க. கோபால்:

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் ஒரு நூற்பாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை..

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் கோடைக் காலத்தில் ஊடுபயிராக இப்போது பெரும்பாலான நிலங்களில் எல்லாம் மிக உயர்ந்த ரகப் பருத்தி விளைவிக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அப்படி

1994 ஏப்ரல் 6]

விளைவிக்கின்ற அந்தப் பருத்திகளை திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு போன்ற பகுதிகளுக்கு எடுத்துச் செல்கின்றபடியினால், நாகை–காயிதே மில்லத் மாவட்டத்திலே ஒரு நூற்பாலை அமைக்கின்ற செயற்குறிப்பு இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும், வருகின்ற ஆண்டில் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் மணல்மேடு தஞ்சாவூர் கூட்டுறவு நூற்பாலை 25 ஆயிரம் கதிர்களுடன் செயல்பட்டு வருகிறது. ஆதலால், அந்த மாவட்டத்தில் இன்னொரு நூற்பாலையை ஏற்படுத்துகிற சூழ்நிலை ஏற்படவில்லை என்பதனை, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, தமிழகத்தில் நம்மிடம் 18 நூற்பாலைகள் இருக்கின்றன. அவைகளின் வாயிலாக உற்பத்தி செய்யப்படுகிற நூல் உபரியாக இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த அளவில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூல்களைவிட உபரியான நூலை நாம் உற்பத்தி செய்து வருகிறோம். ஆதலால், இந்தப் பிரச்சினை எழவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் விளைவிக்கின்ற பருத்தியிலிருந்து எடுக்கப்படுகின்ற பஞ்சு மூட்டைகளை எல்லாம் மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் எடுக்கின்ற அந்த வேளையில் தனியார் முதலாளிகள் எல்லாம் அங்கே வந்து மிகவும் விலை குறைவாக எடுக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதை மாற்றி, இப்போது நெல்லை நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலமாக எடுக்கின்றதைப் போல அரசாங்கமே அந்தப் பஞ்சை நேரடிக் கொள்முதல் நிலையம் போன்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி வாங்குகின்ற ஒரு சூழ்நிலை உருவாகுமா? அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சுக் கொள்முதல் குறித்து சரியான குறிப்புகள் தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் இதற்குத் தனிக் கேள்வி போட்டால், விவசாயத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்துபேசி பிறகு தக்க முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 207, திருமதி ப. சரஸ்வதி; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

207—

கபிலர் மலைத் தொகுதி, ஜேடர்பாளையத்தில் துணை மின் நிலையம் அமைத்தல்.

*** 11092**—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—